श्री अखिलाण्डेश्वरी मातृका पुष्पमाला

Śrī Akhilāndeśvari Mātṛkā Puṣpamālā

ஶ்ரீ அகி$_2$லாண்டே$_3$ஶ்வரீ மாத்ருகா புஷ்பமாலா

Inspired Translation In Tamil and English

Mee. Rajagopalan

Version 2
20 May 2025
www.meenalaya.org

உ

பிரசித்த விநாயகர் காப்பு

**பேருருவாய் தாயுருவின் பிள்ளையார் எனப்பிரசித்த
நேருருவி நாயகனே நெஞ்சத்தில் - தூறுருவி
நல்லனவாய் எல்லாம் நடக்கச்செய் வாயதனால்
வல்லவனே வைப்பாய் வளம்**

*In great form, as the venerable Son of Mother, O Prasiddha Ganapathy
You are right in front, O Vināyaka - May Your grace purify my heart!
As Your nature is to release from impediments, May Your grace bestow goodness!
May You grant power and prosperity!'*

ஜம்புகேஸ்வரர் துதி



நீர்த்திவலை ஆர்ப்பரிக்க நெடுநாவல் பூவிறைக்க
காத்தருளும் மூர்த்திசிவம் காருண்யம் - போர்த்தசிவ
ஜம்புகேஸ் வராஹரா அம்பிகே தொழும்பரா
நம்பினேன் நின்நாமம் சிவம்

As water springs in fountain-head - Under Jambu tree where ripe fruits shed
Iśvara, the succour, reigns to spearhead - Auspicious form with compassion widespread
O Lord Jambhukeśvara of infinite grace, being adored by Mother's embrace
In Śivam Thine Name, I take refuge, You are my succour, I trust, don't refuse!

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேச்வரி சரணம்

அருட்கார் முகிலன்ன மேனியும் ஞானமலர்
ஆனநிலை மாலை அழகும்
அறுபத்து நான்கான பெருதத்து வக்கரண
அழகுமிகு தாடங்க மும்

பொருட்கா லாதிபல புவனமும் கலைகளும்
புருடாதி மாய மான
பூரணத் துவத்துபரி பூரண மானசிவ
பூஷணி யான தவமும்

சிறப்பார் கருணையும் சீர்விழியில் தாய்மையும்
சீரடியில் பேர முதமும்
சிற்றாடைக் கோலமும் நற்றானை மூலமும்
சிலந்திக் கருள் அபயமும்

விரிக்கா விரிக்காவின் கரிக்கால் அரசியே!
வித்தகி அகிலாண்ட உமையே!
வினையாவு மழியவே உனையானும் அடையவே
விவேகம் அருள்க தாயே!

நேராக நின்முன்னே யாராகி நிற்பினும்
நிமிடத்தில் கரைவ ரன்றோ!
நின்னருள் மழையாலே தன்னிலை சுகமாகி
நிச்சயம் நனைவ ரன்றோ!

பாராள வேண்டுமோ? பாவாள வேண்டுமோ?
பவபயம் ஏது மில்லாப்
பாக்கியம் வேண்டுமோ? சௌபாக்கிய மேதரும்
பதமலர் நினது அன்றோ!

சீரான செல்வமே! சிற்றாடை மேனியாய்ச்
சேகரச் சுக வாரியாய்
சின்மயமே உண்மையருள் நன்மயமே நன்மையருள்
சிரித்தெதிர் நிற்கும் அழகே!

வேரான மூலமே! மாறானு கூலமே!
வித்தகி! அகிலாண்ட உமையே!
விடையாவும் அடையவே தடையாவும் உடையவே
விவேகம் அருள்க தாயே!

श्री गुरुभ्यो नमः

உ
அன்னை ஸ்ரீ அகிலாண்டேஶ்வரி

திருத்தாடங்கத் திருப்பணி

13-2-2025 - 16-2-2025

ஓம் ஸ்ரீ குருப்யோ நம:

சாரணராம் சங்கரரும் சார்ந்த குரு புங்கவரும்
காரணமாம் அன்னையருட் தாடங்கம் - பூரணமாய்
மின்னுமருள் வீச மிளிர்விக்குங் கைங்கர்யம்
மன்னுமுயிர்க் கெல்லாம் வரம்

தாடங்கந் தாங்கத் தலையாய ஆழ்மறையின்
பாடங்கள் ஓங்கப் பயனீவார் - நாடெங்கும்
சஞ்சலங்கள் நீங்கச் சமனாக ஆனைக்கா
அஞ்சுகத்திற் காற்றும் அறம்

ஆத்தாள் சிவசக்தி! அப்புதலம் ஆனைக்கா
பூத்தாள்! புவனம் புதுப்பித்தாள் - நம்முலகைக்
காத்தாள்! காதணியின் கற்றொளியால் ஆள்வித்தாள்!
கோத்தாள் குலமா தவள்

பணிவுரை

எல்லாம் வல்ல பரசிவம், அப்புலிங்க வடிவமாக "ஜம்புகேஸ்வரர்" எனும் திருநாம மூர்த்தியாக கொலுவிருக்கும் "திருவானைக்கோவில்" எனும் திருத்தலத்தில், பரசிவத்தின் வரப்பிரசித்தமான மகாசக்தி, அன்னை அகிலாண்டேஸ்வரி எனும் திவ்விய தவரூப சிந்தாமணியாக, ஒரு செவியில் "ஸ்ரீ சக்ரம்", மறு செவியில் "சிவசக்ரம்" என அறுபத்து நான்கு கலைவடிவத் தாடங்கங்களை அணிந்து, மஹாமேரு மேல், மலர்ப்பாதங்கள் பதித்தெழுந்து, சிற்றாடை புனைந்த சீரிளம் பெண்ணாக, கருணை விழியாலும், கவிகாளமேகம் துதிபாடுந் தமிழைத் தந்த தாம்பூலமணிந்த செவ்விதழ்ச் சிரிப்பாலும், தொழுவோர்க்கிரங்கும் தூயமணி விளக்காக, எண்கால் சிலந்திக்கும், ஏற்றுவந்து சிவபூசைசெய்த யானைக்கும் நல்லருள் தந்து நற்கதியளித்த தெள்ளமுதமாக, திருவடி உறைந்தோர்க்கு உண்மை துலக்கும் குருவாக, உண்மை உணர்ந்தோர் உள்ளத்துள் உறையும் உயிர்ச்சக்தியாக, தவத்தால் சிவத்தின் தன்மையளால், அரசாட்சி செய்து வருகின்றாள்.

அன்னை அகிலாண்டேஸ்வரியின் அருளை வியந்து பலபெரியோர்களும் மந்திரங்களாலும், மணிமொழித் தோத்திரங்களாலும் நமக்கு வழிகாட்டி இருக்கிறார்கள். அந்தவகையில், "ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி மாத்ருகா புஷ்பமாலா" எனும் ஒப்புயர்வற்ற வடமொழியால் வரைந்த நந்நூலை ஒரு நல்முனிவர் நமக்கு அளித்திருக்கிறார். வடமொழியின் ஒவ்வொரு எழுத்துக்களை ஆரம்பமாக வைத்து இப்பாடல்கள் இருப்பதால், இதனை 'அக்ஷரமாலிகா' என்றும் அறிந்தோர் அழைப்பர்.

சில பெரியோர்கள், இத்தோத்திரம், ஸநாதன தர்மம் தழைக்க அவதரித்த பகவான் ஆதிசங்கரர் இயற்றியதாகக் கூறினும், பல சான்றோர்கள், இவ்வரிய பாமாலை ஆதிசங்கரர் அருளியதல்ல எனவும், பெயர் அறியாத வேறொரு பெருஞாநி படைத்த பேரமுதாகக் கருத்துரைப்பர். யார் அளித்த வரமாயினும், இப்பாடல்கள், பேரின்பம் அளிக்கவல்ல தேனமுது.

இதனை, அன்னை அகிலாண்டேஸ்வரியின் அருளடிக்கு, அருந்தமிழில் பொருந்துரைத்த கவிப்பூக்களாகப் படைத்துத் துதிக்க, குருவருளால் என்னுள் விளைந்த வேட்கையே, விழைந்தமைத்த முயற்சிக்கு வித்து. ஆங்கிலத்தில் பதப்பொருளும், கருத்தும் சேர்க்கப்பட்டது.

இப்பதிப்பில், என்னுடைய சிற்றறிவினால் குற்றங்கள் விளைந்திருக்குமாயின், அவற்றைக் கருணையால் மன்னித்து, எனைக் கற்பித்து வழி நடத்தப் பெரியோர்கள் அருள் இருக்கிறது எனும் துணிவால், குருவருளின் துணையினால், அன்னை ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியின் மலரடிகளில் இதனைச் சமர்ப்பிக்கிறேன்.

மறைவழி நடந்து, மறைபொருள் எல்லாம் நிறைமனம் தெளிக்க, மாதவ குருவடிவாக இருந்து வழிகாட்டும், ஸ்ரீ ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான, குருமுனிவர்களின் ஆசியினை வேண்டி, அன்னாரின் அருளாசியுடன், இப்பாமாலையை எல்லோரும் படித்துணர்ந்து பரம பாக்கியங்களும் அடையப் பிரார்த்திக்கிறேன்.

மீ. ராஜகோபாலன்
இலண்டன்
20/5/2025 - (இரண்டாம் பதிப்பு)

Prelude

The all-powerful Lord Parameśvara, in the form of Appulinga, manifests as the deity 'Śrī Jambhukeśvara' at the sacred site of Thiruvānaikā. At this divine abode, the supreme energy of Parashiva, the revered goddess Śrī Akhilāndeśvari, appears as the sacred ascetic Chintāmani. She adorns one ear with the "Śrīchakra" and the other with the "Śivachakra" which are the embellishment of sixty-four and beyond divine principles of all creations. Rising gracefully above the Mahāmeru, with Her lotus feet placed upon it, she is portrayed as a youthful maiden clothed in ascetic attire. Through Her compassionate gaze and the radiant smile of Her lips adorned with betel leaves, which gifted the poetic proficiency to Kavi Kālamegam, She is the beacon of pure light, merciful to worshippers, standing in penance with supreme majesty.

Mother Śrī Akhilāndeśvari, Who granted divine grace to both the eight-legged spider and the devoted elephant that performed Śiva worship, leading to their liberation, is the elixir of Truth and the Guru to Her ardent devotees, and at Her holy feet, revealing the ultimate Truth. She resides within the hearts of the enlightened as a life-giving force, governing through the essence of Śiva attained through penance.
Here's the English translation of your Tamil text:

Many revered sages have guided us through hymns, prayers, and poetic praises that glorify the grace of Goddess Śrī Akhilāndeśvari. In this regard, a noble sage has bestowed upon us a remarkable Sanskrit text called 'Śrī Akhilāndeśvari Mātṛkā Puṣpamāla'. Since each verse begins with a letter from the Sanskrit alphabet, scholars refer to it as 'Aksharamālika.'

Some scholars claim that this hymn was composed by Achāryāl Jagadguru Śri Śankara Bhagavatpādāl. However, there are also other scholars who assert that this profound garland of verses was not authored by Bhagavatpādāl, but rather by another enlightened sage whose identity remains unknown.

Regardless of its origin, these sacred verses are like divine nectar, offering supreme bliss.

With the grace of the Guru, I have developed a desire to render this beautiful work into an inspired interpretation, both as Tamil Verses and Romanized text and brief meaning of each verse in English and Tamil. With the support of my Guru's grace, I humbly dedicate this work at the lotus feet of Mother Śrī Akhilāndeśvari.

If any errors have arisen due to my limited knowledge, I seek the benevolent forgiveness of the noble readers, hoping the learned will guide me and illuminate the correct path.

May the blessings of the revered Achāryas of the Kānchi Kāmakoti Peetham, the divine Seers, be upon all of us! May their grace, I pray, illumine all who contemplate upon this hymn, to steer towards perfection.

Mee. Rajagoapalan
London
20/5/2025 (2nd Edition)



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

अध्वातीतपदे अलंकृतशिवे अर्थान्तरर्थे परे
अत्यर्थे अमलाशये अतिदये अर्धेन्दु भूषोज्ज्वले ।
अध्यक्षे अमराङ्गना परिवृते अध्यात्म विद्यामये
अव्यक्ते अचलाधि राजतनये वन्देऽखिलाण्डेश्वरि ॥ १ ॥

அத்4வாதீதபதே3 அலம்க்ருதஶிவே அர்தா2ந்தரர்தே2 பரே
அத்யர்தே2 அமலாஶயே அதித3யே அர்தே4ந்து3 பூ4ஷோஜ்ஜ்வலே ।
அத்4யக்ஷே அமராங்க3நா பரிவ்ருதே அத்4யாத்ம வித்3யாமயே
அவ்யக்தே அசலாதி4 ராஜதநயே வந்தே3(அ)கி2லாண்டே3ஶ்வரி ॥ 1 ॥

adhvātītapade alaṃkṛtaśive arthāntararthe pare
atyarthe amalāśaye atidaye ardhendu bhūṣojjvale |
adhyakṣe amarāṅganā parivṛte adhyātma vidyāmaye
avyakte acalādhi rājatanaye vande'khilāṇḍeśvari || 1 ||

1: O the All-Transcending! (adhvātītapade); O the beauty of Lord Śiva! (alaṁkṛta-śivē);
O the indwelling- innermost meaning in all! (arthāntararthē); O The Supreme! (parē);

2: O All-surpassing! (atyarthē); O the blemish-less-Purity! (amalāśayē); O the most compassionate (atidayē);
O Decorated by the Crescent! (ardhēndu bhūṣōjjvalē);

3: O The Supreme Leader! (adhyakṣe); Escorted all around by the divine maidens (amarāṅganā parivṛtē);
O The form of Supreme Knowledge of the Self (adhyātma vidyāmaye);

4: O The Unmanifest, the cause of all manifestations (avyaktē); -manifesting as - The daughter of Mountains (acalādhi-rājatanayē); I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 1

அகிலமளந் தாயே! சிவனி னலங்காரி! அறிபொருள் எலா முறைவளே!
அடைவிலாய்! பழியிலாய்! அளவிலா அருளுளாய்! அரைமதி அணியு மழகே!
அதிகாரி! பதிவிரதை எஜமானி! உயர்வான ஆன்மநெறி மேன்மை நிலையே!
அறியாத மூலயிரு ளானமலை யிளவரசி! – அன்னை அகிலாண்டேஸ்வரி சரணே! (1)

1: பிரபஞ்சங்களை எல்லாம் கடந்த நிலையே (அத்4வாதீதபதே3), பரசிவனின் எழிலே (அலங்க்ருத ஶிவே);
எல்லாவற்றுள்ளும் கருவான உட்பொருளே (அர்தா2ந்தரர்தே2); எல்லோரிலும் உயர்வானவளே (பரே);

2: எல்லாமும் கடந்தவளே (அத்யர்தே2); களங்கமற்றவளே (அமலாஶயே); எல்லையற்ற கருணைமிக்கவளே (அதித3யே);
பிறைநிலவால் அலங்கரிக்கப்பட்டவளே (அர்தே4ந்து3 பூ4ஷோஜ்ஜ்வலே) ।

3: தலைவியானவளே (அத்4யக்ஷே) தேவ மாதர்களால் சூழப்பட்டவளே (அமராங்க3நா பரிவ்ருதே); ஆத்ம வித்யா
வடிவமானவளே (அத்4யாத்ம வித்3யாமயே)

4: தோற்றங்கடந்த சூக்குமமே (அவ்யக்தே); மலையின் மகளே (அசலாதி4 ராஜதநயே); தாயே ஸ்ரீ அகிலாண்டேஶ்வரி!
உன்னை வணங்குகின்றேன். (வந்தே3 அகி2லாண்டே3ஶ்வரி) ॥ 1



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

आद्ये आगमसम्प्रदायनिपुणे आचार्यवर्यार्चिते
आधारादिसरोजपीठनिलये आलोलनीलालके ।
आताम्राधरचारुमन्दहसिते आपीनवक्षोरुहे
आब्रह्माच्युतशङ्करार्चितपदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ २ ॥

ஆத்3யே ஆக3மஸம்ப்ரதா3யநிபுணே ஆசார்யவர்யார்சிதே
ஆதா4ராதி3ஸரோஜபீட2நிலயே ஆலோலநீலாலகே ।
ஆதாம்ராத4ரசாருமந்த3ஹஸிதே ஆபீநவக்ஷோருஹே
ஆப்3ரஹ்மாச்யுதஶங்கரார்சிதபதே3 வந்தே3(அ)கி2லாண்டே3ஶ்வரி ॥ 2 ॥

ādyē āgamasampradāyanipuṇē ācāryavaryārcitē
ādhārādisarōjapīṭhanilayē ālōlanīlālakē |
ātāmrādharacārumandahasitē āpīnavakṣōruhē
ābrahmācyutaśaṅkarārcitapadē vandē'khilāṇḍēśvari || 2 ||

1: O The foremost! (ādyē); O The Master of codes and conduct prescribed in Vedas (āgama-sampradāya-nipuṇē); O The Supreme, being worshipped by the Seers and followers of Veda (ācārya-varyārcitē);

2: O Seated on the Lotus of Six Chakras, as the root-cause of all (ādhārādi-sarōja-pīṭha-nilayē); O Sporting dark curly hair (ālōlanīlālakē);

3: O with red-colour (ātāmra); lips (adhara); of enchanting (cāru); gentle-smile (manda-hasitē); O with the bosom that nourishes all beings (āpīna-vakṣōruhē);

4: Even by Brahma (ābrahma); Hari (ācyuta); and Hara (śaṅkara); O, Who is being worshipped (ārcitapadē); I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 2

ஆதிபரி பூரணி, வேதவிதி காரணி, அறிந்தோர்கள் தொழும் யோகமே!
ஆதார மாறுமலர் மேலான சூரணி, அலைகூந்தல் நிழல் மேகமே!
ஆனசெவ் விதழ்முறுவல் தேனுனது பெருந்தனம், அனைத்துயிர்க் கருட் போகமே!
ஆகுமயன் அரியரனும் தேடுமுன தடிகளே! – அன்னை அகிலாண்டேஸ்வரி சரணே! (2)

1: முதலுக்கும் முதலான நிறைவே! (ஆத்3யே); வேத நெறிமுறைகளுக்கெல்லாம் அதிகாரியானவளே! (ஆக3ம-ஸம்ப்ரதா3ய-நிபுணே); அத்தகைய வேத நெறிப்படி வாழ்ந்து வழிகாட்டும் ஆச்சாரியர்களும் துதிக்கின்ற யோகமே! (ஆசார்யவர்யார்சிதே)

2: அனைத்துக்கும் மூலாதாரமான ஆறு சக்கரத் தாமரையில் ஆட்சி கொண்டவளே! (ஆதா4ராதி3-ஸரோஜ-பீட2நிலயே); கருநீல நெளி கூந்தலைக் கொண்டவளே! (ஆலோலநீலாலகே);

3: சிவந்த உதடுகளில் மனங்கவரும் குறுநகைத் தேனைக் கொண்டவளே! (ஆதாம்ர-அத4ர-சாரு-மந்த3ஹஸிதே); அனைத்தையும் போஷிக்கும் அருளமுதம் தரும் மார்பினைக் கொண்டவளே! (ஆபீந-வக்ஷோருஹே)

4: பிரம்மன்-ஹரி-ஹரன் முதலானவர்கள் கூட (ஆப்3ரஹ்ம்-அச்யுத-ஶங்கர); தொழுகின்ற திருவடிகளைக் கொண்டவளே (அர்சிதபதே3); தாயே ஸ்ரீ அகிலாண்டாடேஶ்வரி! உன்னை வணங்குகின்றேன். (வந்தே3 அகி2லாண்டே3ஶ்வரி) ॥ 2

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

इच्छाज्ञानसमस्तशक्तिसहिते इन्दीवरश्यामले
इन्द्रोपेन्द्र वरप्रदे इभवनाधीशे इनाराधिते ।
इज्ये इन्दुनिभानने इभनुते इष्टार्थसिद्धिप्रदे
इन्द्राणीनमिते इभाननसुते वन्देऽखिलाण्डेश्वरि ॥ ३ ॥

இச்சா2ஜ்ஞாநஸமஸ்தஶக்திஸஹிதே இந்தீ3வரஶ்யாமலே
இந்த்3ரோபேந்த்3ரவரப்ரதே3 இப4வநாதீ4ஶே இநாராதி4தே ।
இஜ்யே இந்து3நிபா4நநே இப4நுதே இஷ்டார்த2ஸித்3தி4ப்ரதே3
இந்த்3ராணீநமிதே இபா4நநஸுதே வந்தே3(அ)கி2லாண்டே3ஶ்வரி ॥ 3 ॥

icchājñānasamastaśaktisahitē indīvaraśyāmalē
indrōpēndravarapradē ibhavanādhīśē inārādhitē |
ijyē indunibhānanē ibhanutē iṣṭārthasiddhipradē
indrāṇīnamitē ibhānanasutē vandē’khilāṇḍēśvari || 3 ||

1: O The Supreme, endowed with all powers such as the Power-to-Will and Power-to-know etc (icchā-jñcna-samasta-śakti-sahitē); O Black-beauty, Who is like the dark blue lotus (indīvara-śyāmalē);

2: O The Granter of boons to Indra, Hari et al (indra-upēndra-varapradē); O Who reigns in the forest of Elephants, i.e. the holy place “Thiruvānika” (ibha-vanādhīśē); O Who is worshipped by the Sun (ina-ārādhitē);

3: O Who is in the form of all Yajna, Sacrifices (ijyē); O The Moon-faced!(indu-nibhānanē); O Who is adored by the Elephant (ibhanutē); O The bestower of devotees’ desires! (iṣṭārthasiddhipradē);

4: O Who is worshipped by Indrāṇī (indrāṇī-namitē); O the Mother of Lord Ganeśa, the Elephant-faced (ibhānana-sutē); I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 3

இட்டமுற அறிவுமுற எழுஞ்சக்தி முதலே! எழில்நீல மலர் வண்ணமே,
இந்திரனும் அரிவரமும் தந்தருளுங் காவானை எழுஞ்சுடர்த் துதி அன்னமே,
இட்டயியல் வடிவே! இனிந்த முகம் மதியே! இபந்தொழுங் கலைச் சின்னமே!
இந்திரை வரம்யானை தந்தமுகன் தாயே! – அன்னை அகிலாண்டேஸ்வரி சரணே! (3)

1: விழைவு, அறிதல் முதலான சக்திகள் எல்லாவாற்றையும் கொண்ட பராசக்தியே (இச்சா2-ஞாந-ஸமஸ்த-ஶக்தி-ஸஹிதே); கருநீல மலரைப் போல அழகானவளே! (இந்தீ3வ-ரஶ்யாமலே);

2: இந்திரன், திருமால் முதலியோருக்கு வரம் அருள்பவளே! (இந்த்3ர-உபேந்த்3ர-வரப்ர்தே3); யானைக் காட்டை, அதாவது “திருவானைக்கா” திருத்தலத்தை ஆள்பவளே! (இப4-வநாதீ4ஶே); சூரியனால் தொழப்படுபவளே! (இந-ஆராதி4தே);

3; இயற்றும் வேள்விகளின் வடிவமானவளே! (இஜ்யே); நிலவினை முகமாகக் கொண்டவளே! (இந்து3-நிபா4நநே); யானைகளால் துதிக்கப்படுபவளே! (இப4-நுதே); விரும்பியதை இனிந்தருள்பவளே! (இஷ்ட-அர்த2-ஸித்3தி4ப்ரதே3);

4: இந்திராணிக்கு வரம் அளிப்பவளே (இந்த்3ராணீ-நமிதே); வேழமுகத்தானின் தாயே! (இபா4நநஸுதே); தாயே ஸ்ரீ அகிலாண்டாடேஶ்வரி! உன்னை வணங்குகின்றேன். (வந்தே3 அகி2லாண்டே3ஶ்வரி) ॥ 1



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

ईशे ईशविरिञ्चिशौरिवरदे ईड्यालि ईशात्मिके
ईर्ष्यादूषितचित्तदूरचरणे ईशप्रिये ईश्वरि ।
ईडये ईश्वरवामभागनिलये ईङ्कारक्लृप्तोदये
ईशित्वादिमहाविभूतिनिलये वन्देऽखिलाण्डेश्वरि ॥ ४ ॥

ஈஶே ஈஶவிரிஞ்சிஶௌரிவரதே3 ஈட்3யாலி ஈஶாத்மிகே
ஈர்ஷ்யா-தூ3ஷித-சித்த-தூ3ரசரணே ஈஶப்ரியே ஈஶ்வரி ।
ஈட3யே ஈஶ்வர-வாமபா4க3நிலயே ஈங்கார-க்ல்ருப்தோத3யே
ஈஶித்வாதி3மஹாவிபூ4திநிலயே வந்தே3(அ)கி2லாண்டே3ஶ்வரி ॥ 4 ॥

īśē īśaviriñciśaurivaradē īśātmikē
īrṣyādūṣitacittadūracaraṇē īśapriyē īśvari |
īḍayē īśvaravāmabhāganilayē īṅkāraklṛptōdayē
īśitvādimahāvibhūtinilayē vandē'khilāṇḍēśvari || 4 ||

1: O Iśvari! (īśē); Who bestows boons to Hara, Brahma and Hari! (īśa-viriñci-śauri-varadē);
O Who is being worshipped (īḍyāli); as none other than the Iśvara! (īśātmikē)
2: O Whose divine feet is far from those with their minds corrupted with envy (īrṣyā-dūṣita-citta-dūra-caraṇē);
O The Love of Iśvara! (īśapriyē); O Iśvari! (īśvari);
3: O Praise-worthy! (īḍayē); O Who escorts Iśvara on His left-side (īśvara-vāmabhāga-nilayē);
O The Power embellished in the divine sound of 'Im' (īṅkāra-klṛptōdayē);
4: O The embodiment of all supreme glories of Iśvara (īśitvādi-mahā-vibhūt-inilayē);
I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 4

ஈஶ்வரியே, அரனயன்மால் தேசுதரும் பேறருளே, ஈஶ்வஶராய்த் தொழலு முனையே,
ஈறறியாத் தூரமுன தேவடிகள் பொறாமனதே, ஈஶ்வரியே அன்பீஶர் இணயே,
ஈடறியாப் புகழுனுதே, ஈஶ்வரிடம் பூசுவளே, ஈங்கார மான நிலையே,
ஈஶ்வரதி காரமுயர் தேசுவிபூ தித்திரளே – அன்னை அகிலாண் டேஶ்வரி சரணே! (4)

1: ஓ ஈஶ்வரி! (ஈஶே); அரன், அயன், அரி அனைவருக்கும் வரம் அருள்பவளே! (ஈஶ-விரிஞ்சி-ஶௌரி-வரதே3);
ஆராதிப்பதில் (ஈட்3யாலி); ஈஶ்வரராகவே துதிக்கப்படுபவளே! (ஈஶாத்மிகே);
2: ஓ பொறாமையால் களங்கமுற்ற மனமுடையவர்கள் அடையமுடியாத தூரத்தில் திருவடிகளைக் கொண்டவளே!
(ஈர்ஷ்யா-தூ3ஷித-சித்த-தூ3ர-சரணே); ஈஶ்வரரின் அன்பே! (ஈஶப்ரியே); ஈஶ்வரியே! (ஈஶ்வரி);
3: ஓ போற்றத்தக்கவளே! (ஈட3யே); ஈஶ்வரரின் இடப்பக்கத்தில் இடங்கொண்டவளே! (ஈஶ்வர-வாம-பா4க3-நிலயே);
'ஈம்' எனும் விதையொலிக்குள் விளங்கும் சக்தியே! (ஈங்கார-க்ல்ருப்தோத3யே);
4: ஓ ஈஶ்வரரின் உயர்ந்த பெருமைகளை எல்லாம் தன்னுள் கொண்டவளே! (ஈஶித்வாதி3-மஹா-விபூ4தி-நிலயே);
தாயே ஸ்ரீ அகிலாண்டேஶ்வரி! உன்னை வணங்குகின்றேன். (வந்தே3 அகி2லாண்டே3ஶ்வரி) ॥ 4



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

उद्यद्भानुसहस्रकोटिकिरणे उर्वीधरेन्द्रात्मजे
उत्फुल्लाम्बुजलोचने उभयकावेर्यन्तरालाश्रये ।
उद्यच्चन्द्रनिभानने उरुतरे उच्चासने उज्ज्वले
उद्दामद्युतिपुञ्जमञ्जुलतरे वन्देऽखिलाण्डेश्वरि ॥ ५ ॥

உத்3யத்3பா4நு-ஸஹஸ்ரகோடிகிரணே உர்வீத4ரேந்த்3ராத்மஜே
உத்பு2ல்லாம்பு3ஜ லோசநே உப4ய-காவேர்யந்தராலாஶ்ரயே ।
உத்3யச்சந்த்3ர-நிபா4நநே உருதரே உச்சாஸநே உஜ்ஜ்வலே
உத்3தா3மத்3யுதி-புஞ்ஜமஞ்ஜுலதரே வந்தே3(அ)கி2லாண்டே3ஶ்வரி ॥ 5 ॥

udyadbhānu-sahasrakōṭikiraṇē urvīdharēndrātmajē
utphullāmbuja-lōcanē ubhaya-kāvēryantarālāśrayē |
udyaccandra-nibhānanē urutarē uccāsanē ujjvalē
uddāmadyuti-puñjamañjulatarē vandē'khilāṇḍēśvari || 5 ||

1: O The Luminous, like the thousands of rays of the rising Sun! (udyad-bhānu-sahasra-kōṭi-kiraṇē);
O The daughter of King of high-mountains! (urvīdharēndrātmajē);
2: O With the eyes like the blossomed lotus! (utphulla-ambuja-lōcanē);
O Reigning in the place amidst the two branches of River Cauvery! (ubhaya-kāvēryantarālāśrayē);
3: O Whose face is like the rising moon! (udyaccandra-nibhānanē); O The Esteemed! (urutarē);
O Seated on the supreme position! (uccāsanē); O The Most Luminous! (ujjvalē);
4: O Who attracts with the power and glory of infinite lustre! (uddāmadyutipuñja-mañjulatarē);
I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 5

உதிக்கின்ற கதிர்க்கிரண மாயிரமாஞ் சுடரே, உயர்மலைகள் அரசன் மகளே,
உருவிழிகள் தாமரையின் மலருமிதழ்க் காவிரி உனதுயிடம் இருகி ளையுளே!
உதயமதி நினதுமுகம்! உயரியளே! உந்தலம் உன்னதமே! ஒளிரும் அழகே!
உயருமிசை வலிமையொளி கவருமுன தேயொளி! - அன்னை அகிலாண் டேஸ்வரி சரணே! (5)

1: ஓ உதிக்கின்ற சூரியனின் ஆயிரங்கிரணங்களைப் போல ஒளியுடையவளே! (உத்3யத்3-பா4நு-ஸஹஸ்ர-கோடி-கிரணே);
ஓ உயர்ந்த மலையரசன் மகளே! (உர்வீத4ரேந்த்3ராத்மஜே);
2: ஓ மலர்ந்த தாமரை போன்ற விழியாளே! (உத்பு2ல்ல-அம்பு3ஜ-லோசநே); ஓ காவிரியின் இரு ஓட்டங்களுக்கு இடையில் - காவிரி, கொள்ளிடத்திற்கு இடையில் உள்ள திருவானைக்கா - இடம் கொண்டவளே! (உப4ய-காவேர்யந்தராலாஶ்ரயே);
3: உதிக்கின்ற நிலவைப் போன்ற முகமுடையவளே! (உத்3யச்-சந்த்3ர-நிபா4நநே); உயர்வானவளே! (உருதரே);
உயர்வான தலத்தில் இருப்பவளே! (உச்சாஸநே); உன்னத ஒளிமயமானவளே! (உஜ்ஜ்வலே);
4: ஓ வலிமையும் பெருமையும் கொண்ட ஒளியினால் ஈர்ப்பவளே! (உத்3தா3மத்3யுதி-புஞ்ஜ-மஞ்ஜுலதரே);
தாயே ஸ்ரீ அகிலாண்டேஶ்வரி! உன்னை வணங்குகின்றேன். (வந்தே3 அகி2லாண்டே3ஶ்வரி) ॥ 5



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

ऊहापोहविवेकबाह्यनिलये ऊनातिरिक्तोज्ज्वले
ऊर्जस्वन्मणिमेखलाविलसिते ऊरीकृतार्थप्रिये ।
ऊर्ध्वाधोद्भवयोगमूलनिलये ऊष्मापहारोज्ज्वले
ऊधः क्षीरसुधाधृतत्रिभुवने वन्देऽखिलाण्डेश्वरि ॥ ६ ॥

ஊஹாபோஹவிவேகபா$_{3}$ஹ்யநிலயே ஊநாதிரிக்தோஜ்ஜ்வலே
ஊர்ஜஸ்வந்மணிமேக$_{2}$லாவிலஸிதே ஊரீக்ருதார்த$_{2}$ப்ரியே ।
ஊர்த்$_{4}$வாதோ$_{4}$த்$_{3}$ப$_{4}$வயோக$_{3}$மூலநிலயே ஊஷ்மாபஹாரோஜ்ஜ்வலே
ஊத$_{4}$: க்ஷீரஸுதா$_{4}$த்$_{4}$ருதத்ரிபு$_{4}$வநே வந்தே$_{3}$(அ)கி$_{2}$லாண்டே$_{3}$ஶ்வரி ॥ 6 ॥

ūhāpōhavivēkabāhyanilayē ūnātiriktōjjvalē
ūrjasvanmaṇimēkhalāvilasitē ūrīkr̥tārthapriyē |
ūrdhvādhōdbhavayōgamūlanilayē ūṣmāpahārōjjvalē
ūdhaḥ kṣīrasudhādhr̥tatribhuvanē vandē’khilāṇḍēśvari || 6 ||

1: O Who is beyond the discriminative intellect of *Inferences* and *refutations* (ūha-apōha-vivēka-bāhya-nilayē);
O Who shines in all that is minute and vast! (ūnātirikta-jjvalē);
2: O Who is charming with the shining Gems-studded waist-belt! (ūrjasva-maṇi-mēkhalā-vilasitē);
O Who bestows prosperity as per desire! (ūrīkr̥ta-artha-priyē);
3: O Who is at the centre, as the root cause of all above and below! (ūrdhva-adhōdbhava-yōga-mūlanilayē);
O Who quenches the thirst-of-desires with Her light-of-grace! (ūṣma-apahārōjjvalē)
4: O Whose bosoms nourish all-three-worlds with the nectar of milk (ūdhaḥ-kṣīra-sudhādhr̥ta-tri-bhuvanē);
I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 6

ஊகித்தும் வாதித்தும் பகுத்தறிய ஏதிலாய், உருசிறிது பெரிதின் ஒளியாய்,
ஊறுமிடை ஒளிருமணி ஒட்டுமிடைச் சோதியே, உகுபலன் அளிக்கும் நிதியே,
ஊடிநடு மூலவொளி யாகிவுயர் கீழுமாய் உறுதாபந் தணிக்கும் மழையாய்,
ஊறுவமு தூட்டுமுலை யாலுலகு மூவதே - அன்னை அகிலாண்டேஸ்வரி சரணே! (6)

1: ஊகித்தும், வாதித்தும் பகுத்தறிய முடியாத பரவெளியே! (ஊஹ-அபோஹ-விவேக-பா$_{3}$ஹ்ய-நிலயே);
சிற்றொளியாகவும், பேரொளியாகவும் எல்லாவற்றுள்ளும் ஊறியுள்ள சுடரே! (ஊநாதிரிக்தோ-ஜ்ஜ்வலே);
2: கவர்ச்சியான ஒளிபொருந்திய ஒட்டியாணம் அணிந்தவளே! (ஊர்ஜஸ்வந்-மணி-மேக$_{2}$லா-விலஸிதே);
அடியார்கள் விழுமிய நலனை அடைய அருள் செய்பவளே! (ஊரீக்ருதார்த$_{2}$-ப்ரியே);
3: மேல், கீழ் உள்ள என எல்லாவற்றுக்கும் ஆதாரமாக நடுவில் இருக்கின்ற யோக சக்தியே! (ஊர்த்$_{4}$வ-அதோ$_{4}$த்$_{3}$-ப$_{4}$வ-யோக$_{3}$மூலநிலயே); தாபம் அடக்கும் தண்மழையான ஒளியே - அதாவது செயற்பலன் - (ஊஷ்ம-அபஹாரோ-ஜ்ஜ்வலே)
4: மூவுலகங்களையும் வாழ்விக்கும் அமுதப்பால் தரும் மார்பகங்களைக் கொண்டவளே! (ஊத$_{4}$:-க்ஷீர-ஸுதா$_{4}$த்$_{4}$ருத-த்ரிபு$_{4}$வநே); தாயே ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி! உன்னை வணங்குகின்றேன். (வந்தே$_{3}$ அகி$_{2}$லாண்டே$_{3}$ஶ்வரி) ॥ 6

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

ऋग्वेदादिनिषेविते ऋतुनते ऋद्धानुकम्पावहे ।
ऋद्धामोदमुखेप्सिते ऋतुनुते ऋक्षौघसंसेविते ।
ऋक्षाधीशकलान्विते ऋणतमोभास्वत्पदाम्भोरुहे
ऋद्ध्यापूरितविष्टपत्रयनुते वन्देऽखिलाण्डेश्वरि ॥ ७ ॥

ருக்$_3$வேதா$_3$தி$_3$நிஷேவிதே ருதுநதே ருத்$_3$தா$_4$நுகம்பாவஹே ।
ருத்$_3$தா$_4$மோத$_3$முகே$_2$ப்ஸிதே ருதுநுதே ருக்ஷௌக$_4$ஸம்ஸேவிதே ।
ருக்ஷாதீ$_4$ஶகலாந்விதே ருணதமோபா$_4$ஸ்வத்பதா$_3$ம்போ$_4$ருஹே
ருத்$_3$த்$_4$யாபூரிதவிஷ்டபத்ரயநுதே வந்தே$_3$(அ)கி$_2$லாண்டே$_3$ஶ்வரி ॥ 7 ॥

r̥gvēdādiniṣēvitē r̥tunatē r̥ddhānukampāvahē |
r̥ddhāmōdamukhēpsitē r̥tunutē r̥kṣaughasaṁsēvitē |
r̥kṣādhīśakalānvitē r̥ṇatamōbhāsvatpadāmbhōruhē
r̥ddhyāpūritaviṣṭapatrayanutē vandē'khilāṇḍēśvari || 7 ||

1: O Who is worshipped by Rik and all Vedas (r̥gvēdādi-niṣēvitē); Adored by the Seers (r̥tunatē);
O Who is filled with compassion (r̥ddhā-anukampāvahē);
2: O Whose prosperous and fragrant face is enchanting (r̥ddha-amōda-mukha-īpsitē); O Who is Worshipped by the Six Seasons (r̥tunutē); O Who is served by the '*Chandas*', the sound of Vedas (r̥kṣaugha-saṁsēvitē);
3: O Who is wearing the Moon, the King of stars (r̥kṣādhīśa-kalānvitē);
O Whose lotus-feet is illumined by the lustre of virtuous oblations (r̥ṇatamōbhāsvat-padāmbhōruhē);
4: O Who is worshipped by the three worlds that are filled with all prosperity (r̥ddhya-āpūrita-viṣṭapatraya-nutē);
I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 7

ருக்குமுத லானமறை ஓதுமுனை ஞானியரும் பாடும்அரு ளான நிறையே,
ருதமான அறுபருவம் பணிவாகும் அரியமணம் பதியுமுகம் துதியும் மறையே,
ருக்ஷமெனுந் தாரகையின் ராஜகலை சூடுவளின் பூவடிகள் பூசை ஒளியே,
ருத்யமெனும் நிதியமிகு மூவுலகின் தேவியே - அன்னை அகிலாண்டேஸ்வரி சரணே! (7)

1: ஓ ருக் வேதம் முதலியவற்றால் துதிக்கப்படுபவளே (ருக்$_3$வேதா$_3$தி$_3$-நிஷேவிதே); ஓ வேதப்பொருள் உணர்ந்தாரால் பாடப்படுபவளே (ருதுநதே); ஓ கருணையால் நிரப்பப்பட்டவளே (ருத்$_3$த$_4$-அநுகம்பாவஹே);
2: ஓ நறுமணம் மிகுந்த முகத்தால் ஈர்ப்பவளே (ருத்$_3$த$_4$-அமோத$_3$-முக$_2$-ஈப்ஸிதே); ஓ ஆறு பருவங்களாலும் ஆராதிக்கப்படுபவளே (ருதுநுதே); ஓ வேதச் சந்தங்களின் சேவைகளை ஏற்பவளே (ருக்ஷௌக$_4$-ஸம்ஸேவிதே);
3; விண்மீன்களிடையே ஆளுமை கொண்ட நிலவினை அணிந்தவளே (ருக்ஷாதீ$_4$ஶ-கலாந்விதே); மேலான பூசைகளின் பிரகாசத்தால், ஒளியுண்ட தாமரைத் திருவடிகளைக் கொண்டவளே (ருணதமோபா$_4$ஸ்வத்-பதா$_3$ம்போ$_4$ருஹே);
4: ஐஷ்வர்யங்களால் நிரப்பப்பட்ட முவ்வுலகங்களாலும் வணங்கப்படுபவளே (ருத்$_3$த்$_4$ய-அபூரித-விஷ்டபத்ரய-நுதே); தாயே ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி! உன்னை வணங்குகின்றேன். (வந்தே$_3$ அகி$_2$லாண்டே$_3$ஶ்வரி) ॥ 7

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

रूपारूपसदाशिवान्तरगते रूपे सदा रूपिणि
रूपातीतपरापरार्थनिलये रूढप्ररूढात्मिके ।
नृणां जन्मजरापहारनिलये नृत्राणकल्पद्रुमे
नृणां पापविमोचनाद्यफलदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ ८ ॥

ரூபாரூபஸதா$_3$ஶிவாந்தரக$_3$தே ரூபே ஸதா$_3$ ரூபிணி
ரூபாதீத பராபரார்த$_2$நிலயே ரூட$_4$ப்ரரூடா$_4$த்மிகே ।
ந்ரூணாம் ஜந்மஜராபஹாரநிலயே ந்ருத்ராணகல்பத்$_3$ருமே
ந்ரூணாம் பாபவிமோசநாத்$_3$யப$_2$லதே$_3$ வந்தே$_3$(அ)கி$_2$லாண்டே$_3$ஶ்வரி ॥ 8 ॥

rūpārūpa sadāśivāntaragatē rūpē sadā rūpiṇi
rūpātītaparāparārthanilayē rūḍhaprarūḍhātmikē |
nṝṇāṁ janmajarāpahāranilayē nṛtrāṇakalpadrumē
nṝṇāṁ pāpavimōcanādyaphaladē vandē’khilāṇḍēśvari || 8 ||

1: O Who is indwelling in Sadaśiva, the Form and Formless (rūpa-ārūpa-sadāśiva-antaragatē);
O The Manifest (rūpē); O Who is forever indwelling in all Forms (sadā-rūpiṇi);

2: O Who transcends all forms (rūpa-ātīta); O Who is the basis for all beings of higher and lower forms (para-apara-artha-nilayē); O Who is the field of all appearances and reappearances (rūḍha-prarūḍha-ātmikē);

3: O Who leads the passage of birth decay and death cycle (nṝṇāṁ- janma-jarā-apahāra-nilayē); O Who is like the ‘wish-bearing-tree’ for those seeking redemption from the cycle of birth-and-death (nṛtrāṇa-kalpadrumē)

4: O Who bestows grace to rid of sinful acts and the adverse impacts (nṝṇāṁ-pāpa-vimōcanādya-phaladē);
I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 8

ரூபம ரூபம தானச தாசிவச் சுடருரு வேநித் தில வடிவே,
ரூபமி லாமலும் ரூபமெ லாமிலும் காரண மாகிய விளை நிலமே,
ரூபமென் றேயெழுந் தாருலர்ந் தழிவுறும் பாதையிற் கற்பக மர மெனவே,
பாபமி லாவுயர் வாழ்வருள் வடிவே - அன்னை அகிலாண் டேஸ்வரி சரணே! (8)

1: ஓ உருவாயும் அருவாயும் விளங்கும் சதாசிவத்தின் உள்ளொளியானவளே (ரூப-அரூப-ஸதா$_3$ஶிவ-அந்தர-க$_3$தே); ஓ அழகிய தோற்றமுடையவளே (ரூபே); ஓ எல்லாத் தோற்றங்களுக்கும் எப்போதும் காரணமானவளே (ஸதா$_3$ ரூபிணி);

2: ஓ எல்லாத் தோற்றங்களையும் கடந்த நிர்க்குணப் பிரஹ்மமே (ரூபாதீத); மேல், கீழென இருக்கும் எல்லாத் தோற்றங்களுக்கும் காரணமானவளே (பர-அபர-அர்த$_2$-நிலயே); தோன்றித் தோன்றி விளங்குவனவற்றுக்கு எல்லாம் ஆதாராமன விளைத்து அறுவடை செய்கின்ற நிலமானவளே (ரூட$_4$-ப்ரரூட$_4$-ஆத்மிகே);

3: ஓ பிறப்பு, முதிர்ச்சி, இறப்பு எனும் பாதையை வழி நடத்துபவளே (ந்ரூணாம் ஜந்ம-ஜரா-ஆபஹார-நிலயே); அப்பாதையில் செல்வோரின் ஆசைகளைப் பூர்த்தி செய்வதில் கல்பதரு போன்றவளே (ந்ருத்ராண-கல்பத்$_3$ருமே);

4: ஓ பாவங்களைக் கழுவக் கருணை செய்வதில் முதன்மையானவளே (ந்ரூணாம் பாப-விமோசநாத்$_3$ய-ப$_2$லதே$_3$); தாயே ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி! உன்னை வணங்குகின்றேன். (வந்தே$_3$ அகி$_2$லாண்டே$_3$ஶ்வரி) ॥ 8

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

क्लृप्ताशेष जगन्महेश निलये क्लृप्ताङ्ग रागोज्ज्वले
क्लृप्ताक्लृप्त विशङ्क्यमान विलसन्मध्यावली रञ्जिते ।
लिङ्गाराधन तत्परे लिकुचराजत्पाणिपङ्केरुहे
क्लृप्ताकल्प मनोहराङ्गलतिके वन्देऽखिलाण्डेश्वरि ॥ ९ ॥

க்ல்ருப்தாஶேஷ ஜக$_3$ந்மஹேஶ நிலயே க்ல்ருப்தாங்க$_3$ ராகோ$_3$ஜ்ஜ்வலே
க்ல்ருப்தாக்ல்ருப்த விஶங்க்யமாந விலஸந் மத்$_4$யாவலீ ரஞ்ஜிதே ।
லிங்கா$_3$ராத$_4$ந தத்பரே லிகுசராஜத்பாணிபங்கேருஹே
க்ல்ருப்தாகல்ப மநோஹராங்க$_3$லதிகே வந்தே$_3$(அ)கி$_2$லாண்டே$_3$ஶ்வரி ॥ 9 ॥

klṛptāśēṣa jaganmahēśa nilayē klṛptāṅga rāgōjjvalē
klṛptāklṛpta viśaṅkyamānavilasan madhyāvalī rañjitē |
liṅgārādhana tatparē likucarājatpāṇipaṅkēruhē
klṛptākalpa manōharāṅgalatikē vandē'khilāṇḍēśvari || 9 ||

1: O Who is the abode of Lord Maheśvara, the creator of the entire Universe (klṛptāśeṣa-jagan-maheśa-nilaye);
O Who is shining with the body decorated with luminous ornaments (klṛpta-aṅga-rāgōjjvalē);

2: O Who is luminous with the slim lined-waist, the existence of which is doubtful due to its slenderness (rklṛpta-āklṛpta-viśaṅkya-māna-vilasan-madhyāvalī-rañjitē);

3: O Who is devoted in the worship of Śiva-linga (liṅga-ārādhana-tatparē); O Who has lotus-like hands holding the flower of grape-vine (likucarājat-pāṇi-paṅkēruhē);

4: O Whose enchanting form is like a beautiful and tender creeper (klṛptākalpa-manōhara-aṅgalatikē);
I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 9

க்லுருப்தமென உள்ளவுல காளுமிறை உறைவிடமே, கிரங்குமொளி நகையணி வளே,
க்லுருப்தமென உள்ளதுவோ இல்லையது வோயெனும் கிரணவொளி இடையுடை யளே,
க்லுருப்தமதன் அடையாளம் இலிங்கமெனப் பூசிக்கும் இளந்திராட்சை மலர்க்கை யளே,
க்லுருப்தமென விளையுமிளங் கொடியான அன்னமே - அன்னை அகிலாண் டேஸ்வரி சரணே! (9)

1: ஓ விளைந்த உலகம் யாவையும் படைத்த மஹேஶ்வரர் வதியும் இடமே (க்ல்ருப்த-அஶேஷ-ஜக$_3$ந்-மஹேஶ-நிலயே);
ஓ ஒளிமிக்க ஆபரணங்களை அணிந்த உடலாற் பிராகசிப்பவளே (க்ல்ருப்த-அங்க$_3$-ராகோ$_3$ஜ்ஜ்வலே);

2: ஓ இருக்கிறதா (க்ல்ருப்த) இல்லையா (அக்ல்ருப்த) என ஐயம் விளைக்கும்படியான ஒளிமிக்க மெல்லிய வரிகொண்ட இடை கொண்டவளே (விஶங்க்ய-மாந-விலஸந்மத்$_4$யாவலீ-ரஞ்ஜிதே);

3; ஓ இருப்பதின் அடையாளமான சிவலிங்கத்தை ஆராதிப்பதில் விருப்பமுடையவளே (லிங்க$_3$-ஆராத$_4$ந-தத்பரே);
ஓ மலர்போன்ற கைகளில் திராட்சைக் கொடிமலரைக் கொண்டவளே (லிகுசராஜத்-பாணி-பங்கேருஹே);

4: ஓ மனம் கவரும் மேனியுடன் மென்மையான கொடியாக விளங்குபவளே (க்ல்ருப்தாகல்ப-மநோஹராங்க$_3$லதிகே);
தாயே ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி! உன்னை வணங்குகின்றேன். (வந்தே$_3$ அகி$_2$லாண்டே$_3$ஶ்வரி) ॥ 9



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

लूताधीश गजेन्द्र पूजितपदे लूनाहितेशान्विते।
क्लीङ्काराङ्कित बिन्दुपीठनिलये क्लीङ्कार रूपेडिते ।
लूतातन्तुजडीकृतेशनिलये लूनाहिवल्लीदले
लूताक्ष्मापति मुक्तिदातृमहिले वन्देऽखिलाण्डेश्वरि ॥ १० ॥

லூதாதீ4ஶ க3ஜேந்த்3ர பூஜிதபதே3 லூநாஹிதேஶாந்விதே।
க்லீங்காராங்கித பி3ந்து3பீட2நிலயே க்லீங்கார ரூபேடி3தே ।
லூதாதந்துஜடீ3க்ருதேஶநிலயே லூநாஹிவல்லீத3லே
லூதாக்ஷ்மாபதி முக்திதா3த்ருமஹிலே வந்தே3(அ)கி2லாண்டே3ஶ்வரி ॥ 10 ॥

lūtādhīśa gajēndra pūjitapadē lūnāhitēśānvitē|
klīṅkārāṅkita bindupīṭhanilayē klīṅkāra rūpēḍitē |
lūtātantujaḍīkṛtēśanilayē lūnāhivallīdalē
lūtākṣmāpati muktidātṛmahilē vandē'khilāṇḍēśvari || 10 ||

1: O Whose divine-feet are worshipped by the Spider and Elephant (lūtā-adhīśa-gajēndra-pūjita-padē);
O Who is the divine escort of Iśvara, the Coolest, the remover of evil (lūnāhitē-śānvitē);
2: O Who resides in the abode of divine sound 'klīm' (klīṅkāra-aṅkita-bindu-pīṭha-nilayē);
O Who is worshipped by the 'klīm' mantra (klīṅkāra-rūpēḍitē);
3: O The flowing water to Iśvara (jaḍīkṛtēśa-nilayē) Who is confounded by the cob-web (lūtātantu); i.e. Iśvara is unmoving principle and Ambal is the moving principle; O who is adorned with garland of betel-leaves (लूनाहविल्लीदले);
4: O Mother, Who liberated the Spider who reincarnated as the King (lūtā-kṣmāpati-mukti-dātṛ-mahilē);
I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 10

லூதமெனும் சிலந்தியுடன் யானக்கும் முக்தியருள் சீதளரின் துணைவடி வமே,
க்லீங்கார வேதவொலி மேலான ஜோதியே, க்லீங்காரந் துதிக்கும் நிதியே,
லூதவலை கட்டசிவ யோகமசை வற்றதென நீரசைவெந் நிலையா ரமே,
லூதமதன் மறுபிறவி யாயரசன் முக்தியே - அன்னை அகிலாண் டேஸ்வரி சரணே! (10)

1: ஓ சிலந்தியாலும், யானையாலும் பூஜிக்கப்படுகின்ற திருவடிகளை உடையவளே (லூதாதீ4ஶ க3ஜேந்த்3ர பூஜிதபதே3);
ஓ தீமைகளை அழிக்கின்ற - குளிர்ச்சியான ஜம்புகேஶ்வரரின் அன்புத்துணையே (லூநாஹிதேஶாந்விதே);
2: ஓ "க்லீம்" எனும் பீஜ மந்திர ஒலிக்குள் நிலைத்து இருப்பவளே (க்லீங்காராங்கித பி3ந்து3பீட2நிலயே);
ஓ "க்லீம்" எனும் பீஜ மந்திரத்தால் பூஜிக்கப்படுபவளே (க்லீங்கார ரூபேடி3தே);
3: ஓ சிலந்தியின் கூட்டினால் சலனம் அற்றவராகிவிட்ட ஈஶ்வரருக்கு, அசைவினைத் தருகின்ற நீராக இருப்பவளே (லூதாதந்துஜடீ3க்ருதேஶநிலயே); ஓ வெற்றிலை மாலை அணிந்தவளாக விளங்குபவளே (லூநாஹிவல்லீத3லே);
4: ஓ சிலந்திக்கும், அதன் மறுபிறப்பான அரசனுக்கும் முக்தியை அருளியவளே (லூதாக்ஷ்மாபதி முக்திதா3த்ருமஹிலே);
தாயே ஸ்ரீ அகிலாண்டேஶ்வரி! உன்னை வணங்குகின்றேன். (வந்தே3 அகி2லாண்டே3ஶ்வரி) ॥ 10

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

एके एकमहाम्बुराशिनिलये एकान्तक्लृप्तोदये
एकानेकतया विभक्तभुवने एकातपत्रोज्ज्वले ।
एणीचारुविलोललोचनयुगे एकावलीभूषणे
एतत्त त्वमयाणिमादिवरदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ ११ ॥

ஏகே ஏகமஹாம்பு$_{3}$ராஶிநிலயே ஏகாந்தக்ல்ருப்தோத$_{3}$யே
ஏகாநேகதயா விப$_{4}$க்தபு$_{4}$வநே ஏகாதபத்ரோஜ்ஜ்வலே ।
ஏணீசாருவிலோல லோசநயுகே$_{3}$ ஏகாவலீபூ$_{4}$ஷணே
ஏதத் தத்த்வமயாணிமாதி$_{3}$வரதே$_{3}$ வந்தே$_{3}$(அ)கி$_{2}$லாண்டே$_{3}$ஶ்வரி ॥ 11 ॥

ēkē ēkamahāmburāśinilayē ēkāntaklṛptōdayē
ēkānēkatayā vibhaktabhuvanē ēkātapatrōjjvalē |
ēṇīcāruvilōla lōcanayugē ēkāvalībhūṣaṇē
ētat tattvamayāṇimādivaradē vandē'khilāṇḍēśvari || 11 ||

1: O Who is unique (ēkē); O Whose abode is the vast expanse of water, i.e. the space of milky-ocean (ēka-mahā-āmburāśinilayē); O Who is exclusively positioned to bestow compassion to all (ēkānta-klṛptōdayē);

2: O Who for Her has many worlds "mityatvam" as all as the One "satyam" (ēka-anēkatayā- vibhakta-bhuvanē) i.e. She is One with Brahman as well as manifest in all forms within which Brahman indwells; O Shining as the Umbrella of creation, sustenance, assimilation, concealment and grace-bestowing (ēkātapatrōjjvalē);

3: O Who has the enchanting quivering look of a doe (ēṇīcāru-vilōla-lōcanayugē); O Who is wearing the unique garland - known as "nilaimālai" - which is unique to Ambal at Thiruvānaikā Temple (ēkāvalī-bhūṣaṇē);

4: O Who is the embodiment of Atma-jnāna, as well as great powers such as "anima" etc. (ētat-tattvamaya-aṇimādi-varadē); I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 11

ஏதுயிணை வானாழி மீதுவளர் மூலமே, ஏகாந்த அருட் சீலமே,
ஏராள மாயுலகும் ஏகாந்த மாயுலவும் எழிலருட் குடைக் கோலமே,
ஏதுமறி யாதயிளம் மான்விழிக ளாகியலை மீன்களருள் நிலை மாலையே,
ஏமமருள் ஆன்மமணி மாயெட்டுச் சித்தியருள் - அன்னை அகிலாண்டேஶ்வரி சரணே! (11)

1: ஓ இணையற்றவளே (ஏகே); வானாழியை ஆள்பவளே (ஏக-மஹாம்பு$_{3}$ராஶி-நிலயே); சிறப்பான இடத்தில் இருந்து கருணை புரிபவளே (ஏகாந்தக்ல்ருப்தோத$_{3}$யே);

2: ஓ ஒன்றேயான சத்தியமும், அதேசமயம் பல உலகங்களும் இடமாகக் கொண்டவளே (ஏக-அநேக-தயா-விப$_{4}$க்த-பு$_{4}$வநே); படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய அருட் குடையானவளே (ஏகாதபத்ரோஜ்ஜ்வலே);

3; ஓ மருளும் இளம் பெண்மான் கண்களாக, அருள் அலைபாயும் கண் மீன்கள் கொண்டவளே (ஏணீசாரு-விலோல-லோசநயுகே$_{3}$); திருவானைக்காவின் சிறப்பான "நிலைமாலை" அணிந்தவளே (ஏகாவலீபூ$_{4}$ஷணே);

4: ஓ நலமருளும் ஆத்ம ஞான தத்துவமாய் விளங்கி, அடியார்களுக்கு "அணிமா" முதலான அட்டசித்திகளையும் அருள்பவளே (ஏதத் தத்த்வமய-அணிமாதி$_{3}$-வரதே$_{3}$);
தாயே ஸ்ரீ அகிலாண்டேஶ்வரி! உன்னை வணங்குகின்றேன். (வந்தே$_{3}$ அகி$_{2}$லாண்டே$_{3}$ஶ்வரி) ॥ 11



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

ऐङ्कारासनमध्यपीठनिलये ऐन्द्रादिलोकप्रदे
ऐरावत्युपमानदेहलतिके ऐन्द्रादिशक्तीडिते ।
ऐङ्काराक्षरवेदवेद्यविभवे ऐश्वर्यदानेक्षणे
ऐमैमित्यनुसन्दधानभुवने वन्देऽखिलाण्डेश्वरि ॥ १२ ॥

ஐங்காராஸ நமத்$_4$யபீட$_2$நிலயே ஐந்த்$_3$ராதி$_3$ லோகப்ரதே$_3$
ஐராவத்யுபமாநதே$_3$ஹலதிகே ஐந்த்$_3$ராதி$_3$ ஶக்தீடி$_3$தே ।
ஐங்காராக்ஷர வேத$_3$வேத்$_3$ய விப$_4$வே ஐஶ்வர்யதா$_3$நேக்ஷணே
ஐமைமித்யநுஸந்த$_3$தா$_4$ந பு$_4$வநே வந்தே$_3$(அ)கி$_2$லாண்டே$_3$ஶ்வரி ॥ 12 ॥

aiṅkārāsa namadhyapīṭhanilayē aindrādilōkapradē
airāvatyupamānadēhalatikē aindrādiśaktīḍitē |
aiṅkārākṣara vēdavēdya vibhavē aiśvaryadānēkṣaṇē
aimaimityanusandadhāna bhuvanē vandē'khilāṇḍēśvari || 12 ||

1: O Who is seated at the centre of the sound of the bija-mantra 'aym' (laiṅkārāsa namadhyapīṭhanilayē);
O Who grants the worlds of Indra and such heavenly joy (aindrādilōkapradē);
2: O Whose body is like the creeper of lightning (airāvaty-upamāna-dēha-latikē);
O Who is worshipped by all the angels that empower our senses, the 'Indriya' (aindrādiśaktīḍitē);
3: O Who is adored by the sound of 'aym' and worshipped by the Vedas (aiṅkārākṣara vēdavēdya vibhavē);
O Who bestows all prosperity of lordship (aiśvarya-dānēkṣaṇē)
4: O Who is to be meditated continuously as 'aym' (aim-aim-iti-anusandadhāna bhuvanē);
I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 12

ஐம்-கார வித்தொலியுன் மத்தியப் பீடமே, அமருலகுந் தருஞ் செல்வமே,
ஐரா வதமின்ன லானகொடி மேனியே, ஐயிருயிந் திரியம் தொழுகுமே,
ஐம்-கார முந்துதியே ஆயுமறை மந்திரமே, ஐஸ்வர்யந் தரும் வள்ளலே,
ஐம் ஐம் எனக்கணமும் அமையுமனத் தீபமே- அன்னை அகிலாண் டேஸ்வரி சரணே! (12)

1: ஓ "ஐம்" எனும் பீஜமந்திரத்தின் மத்தியில் இருப்பவளே (ஐங்கார-ஆஸந-மத்$_4$யபீட$_2$நிலயே);
ஓ இந்திரலோகம் முதலான பலனை அளிப்பவளே (ஐந்த்$_3$ராதி$_3$ லோகப்ரதே$_3$);
2: ஓ மின்னல் கொடி பொன்ற உடலைக் கொண்டவளே (ஐராவத்-யுபமாந-தே$_3$ஹ-லதிகே);
ஓ "ஐந்த்ரீ" எல்லா இந்திரியங்களின் தேவதையாலும் பூஜிக்கப்படுபவளே (ஐந்த்$_3$ராதி$_3$ ஶக்தீடி$_3$தே);
3: ஓ "ஐம்" எனும் மந்திர ஒலியாலும், வேதங்களாலும் அறியத் தக்க பெருமை உடையவளே (ஐங்கார-அக்ஷர வேத$_3$வேத்$_3$ய விப$_4$வே); ஓ ஆளுமை முதலான எல்ல நிதியங்களையும் தருபவளே (ஐஶ்வர்யதா$_3$நேக்ஷணே);
4: ஓ "ஐம்" "ஐம்" எனத் தொடர்ந்து தியானிப்பதற்கு உரியவளே (ஐம்-ஐம்-இதி-அநுஸந்த$_3$தா$_4$ந பு$_4$வநே);
தாயே ஸ்ரீ அகிலாண்டேஶ்வரி! உன்னை வணங்குகின்றேன். (வந்தே$_3$ அகி$_2$லாண்டே$_3$ஶ்வரி) ॥ 12

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

ओमित्येकपदावलीडितपदे ओजोविशेषान्विते
ओष्ठाधावितबिम्बविद्रुमलते ओघत्रयाराधिते ।
ओघैरप्सरसां सदापरिवृते ओताखिलार्थाधिपे
ओजोराजितवाग्विभूतिविनुते वन्देऽखिलाण्डेश्वरि ॥ १३ ॥

ஓமித்யேக பதா$_3$வலீடி$_3$தபதே$_3$ ஓஜோவிஶேஷாந்விதே
ஓஷ்டா$_2$தா$_4$வித பி$_3$ம்ப$_3$வித்$_3$ருமலதே ஓக$_4$த்ரயாராதி$_4$தே ।
ஓகை$_4$ரப்ஸரஸாம் ஸதா$_3$பரிவ்ருதே ஓதாகி$_2$லார்தா$_2$தி$_4$பே
ஓஜோராஜித வாக்$_3$விபூ$_4$தி விநுதே வந்தே$_3$(அ)கி$_2$லாண்டே$_3$ஶ்வரி ॥ 13 ॥

ōmityēka padāvalīḍitapadē ōjōviśēṣānvitē
ōṣṭhādhāvita bimbavidrumalatē ōghatrayārādhitē |
ōghairapsarasāṁ sadāparivr̥tē ōtākhilārthādhipē
ōjōrājita vāgvibhūti vinutē vandē’khilāṇḍēśvari || 13 ||

1: O Who is worshipped with the words following the sound of 'ōm' (ōm-iti-ēka padāvalīḍita-padē); O Who is endowed with the supreme energy and vigour (ōjōviśēṣānvitē);

2: O Whose rosy lips drive away the shine of corals and the Coccinia fruits (ōṣṭhādhāvita bimba-vidruma-latē) O Who is worshipped by the abundance of three rivers (ōghatraya-ārādhitē);

3: O Who is escorted and worshipped by the Divine Maidens (ōghair-apsarasāṁ-sadā-parivr̥tē) O Who is the power of attraction that binds one with the other - the cause of change (ōta-akhila-arthādhipē);

4: O Who is the worshipped by the luminous words of those endowed with greatness (ōjōrājita vāg-vibhūti vinutē); I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 13

ஓம்-காரம் முதலான ரீங்கார மானவொலி ஓதுமே ஓஜஸமுன் இசையே,
ஓவியமே பவளயிதழ்க் கோவையுப மானமோ, ஓடுமூ வகையின் அசைவே,
ஓதியடி சேவைபுரி வாரமர தேவியர்கள், ஒன்றொடுவொன் றொன்றும் பசையே,
ஓதுமுயர் வானவரின் வாயுரையின் சோதியே – அன்னை அகிலாண் டேஸ்வரி சரணே! (13)

1: ஓ ஒப்பற்ற "ஓம்" முதலாய் வரும் சொற்களின் ஒலியால் துதிக்கப்படுபவளே (ஓமித்யேக பதா$_3$வலீடி$_3$தபதே$_3$); ஓ உயர்வும் பெருவீச்சும் கொண்ட சக்தியை உடையவளே (ஓஜோவிஶேஷாந்விதே);

2: ஓ பவளக் கொடியையும் கோவைக் கனியையும் விரட்டும் சிவந்த அதரங்களைக் கொண்டவளே (ஓஷ்டா$_2$தா$_4$வித பி$_3$ம்ப$_3$-வித்$_3$ருமலதே); ஓ மூன்று பெருவளங்களாலும் - கங்கா, யமுனா, சரஸ்வதி - மூன்று அனுபவம், மூன்று குணம், மூன்று உடல், என்பதான பல தத்துவங்களால் - போற்றப்படுபவளே (ஓக$_4$த்ரயாராதி$_4$தே);

3; ஓ எப்பொழுதும் சேவையும், துதியும் செய்யும் "அப்ஸரஸ்" முதலான தேவ கன்னியரால் சூழப்பட்டவளே (ஓகை$_4$ர்-அப்ஸரஸாம் ஸதா$_3$-பரிவ்ருதே); ஓ ஒன்றுடன் ஒன்றை இணைக்கின்ற சக்தி வடிவானவளே (ஓதாகி$_2$லார்தா$_2$தி$_4$பே);

4: ஓ "ஓஜஸ்" எனும் பெருவலிவும் அருளும் கொண்டோர் வாக்கில் புகழப்படுபவளே (ஓஜோராஜித வாக்$_3$விபூ$_4$தி விநுதே); தாயே ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி! உன்னை வணங்குகின்றேன். (வந்தே$_3$ அகி$_2$லாண்டே$_3$ஶ்வரி) ॥ 13



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

औशीरादिसुगन्धिशोभनकचे औत्पत्तिजालप्रिये
औदासीन्यविभिन्नदैत्यविभवे औपाधिकोपान्विते ।
औदार्याकरपादपङ्कजयुगे औपम्यहीनानने
औमाकान्तपदप्रदार्तिहपदे वन्देऽखिलाण्डेश्वरि ॥ १४ ॥

ஔஶீராதி$_3$ ஸுக$_3$ந்தி$_4$ஶோப$_4$நகசே ஔத்பத்திஜாலப்ரியே
ஔதா$_3$ஸீந்யவிபி$_4$ந்ந தை$_3$த்யவிப$_4$வே ஔபாதி$_4$கோபாந்விதே ।
ஔதா$_3$ர்யாகர பாத$_3$பங்கஜயுகே$_3$ ஔபம்யஹீநாநநே
ஔமாகாந்தபத$_3$ ப்ரதா$_3$ர்திஹபதே$_3$ வந்தே$_3$(அ)கி$_2$லாண்டே$_3$ஶ்வரி ॥ 14 ॥

auśīrādi sugandhiśōbhanakacē autpattijālapriyē
audāsīnyavibhinna daityavibhavē aupādhikōpānvitē |
audāryākara pādapaṅkajayugē aupamyahīnānanē
aumākāntapada pradārtihapadē vandē'khilāṇḍēśvari || 14 ||

1: O With the fragrant hair that is like dressed with sweet-scent of Uśa-grass etc. (auśīrādi sugandhi śōbhanakacē);
O Who relishes the *will* of Her *Maya-śakti* that causes the creation etc. again and again; (autpattijālapriyē);
2: O Who is adored for Her indifference / forbearance to the might of evil (audāsīnyavibhinna daityavibhavē);
O Who is admired for Her timely intervention, sporting anger for the good riddance of evil (aupādhikōpānvitē);
3: O Whose lotus-like feet is the ocean of compassion that liberates all (audāryākara pādapaṅkajayugē);
O Whose countenance that bestow such grace is beyond comparison (aupamyahīnānanē);
4: O Whose divine feet cut asunder the grief of Samsāra and bestow the Oneness with Iśvara (aumākāntapada pradārtihapadē); I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 14

ஔசீர மானமண வேரணைய நறுமுடி, அவ்யக்த முடன் வ்யக்தம் அதுவாய்
அவ்விழைவில் ஆள்கிறாய்! அரக்கரோர் பொருட்டிலாய்! அவசியத் தருணம் வருங்கால்
ஔடதமென் றானசினம், அருளுமுகம் ஒப்பிலாய், அருட்கடல் அடிமலர் தருகிறாய்,
அவ்யமறத் துயரமற மெய்யிணைத் திடுவதே - அன்னை அகிலாண் டேஸ்வரி சரணே! (14)

1: ஓ நல்மணம் கமழும் வெட்டிவேர் முதலான ஊட்டப்பட்டதாக விளங்கும் நறுமணம் மிக்க முடி உடையவளே (ஔஶீராதி$_3$ - ஸுக$_3$ந்தி$_4$ஶோப$_4$நகசே); ஓ படைப்பு முதலானவற்றை மீண்டும் மீண்டும் நடத்தும் மாயசக்தியில் விருப்பம் உடையவளே (ஔத்பத்திஜாலப்ரியே);
2: ஓ கொடிய அரக்கர்களை ஒரு பொருட்டாக மதிக்காத் பெருமை பெற்றவளே(ஔதா$_3$ஸீந்யவிபி$_4$ந்ந- தை$_3$த்ய-விப$_4$வே); ஓ தேவைப்படும் பொழுது, சினத்தை வெளிப்படுத்திக் கொடுமையை அழிப்பவளே (ஔபாதி$_4$கோபாந்விதே);
3: ஓ பெருந்தன்மைக் கடலான திருவடி மலர்களை உடையவளே (ஔதா$_3$ர்யாகர-பாத$_3$பங்கஜயுகே$_3$); ஓ ஒப்புமை இல்லாத திருமுகத்தைக் கொண்டவளே (ஔபம்யஹீநாநநே);
4: ஓ முழுமைதரும் பிரம்மத்தில் இணைத்து, இருமைத் துயரறுக்கும் அருட் திருவடிகளை உடையவளே (ஔமாகாந்தபத$_3$ ப்ரதா$_3$ர்திஹபதே$_3$); தாயே ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி! உன்னை வணங்குகின்றேன். (வந்தே$_3$ அகி$_2$லாண்டே$_3$ஶ்வரி) ॥ 14



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

अम्भोजासनमुख्यसेवितपदे अम्भोधरश्यामले
अङ्गाकल्पितरत्नभूषणशते अण्डौघसंसेविते ।
अम्ब्वाकाशतया विभक्तभुवने अम्भोरुहाङ्घ्रिद्वये
अह्नायान्तकसूदनप्रियतमे वन्देऽखिलाण्डेश्वरि ॥ १५ ॥

அம்போ4ஜாஸநமுக்2யஸேவிதபதே3 அம்போ4த4ரஶ்யாமலே
அங்கா3கல்பிதரத்நபூ4ஷணஶதே அண்டௌ3க4ஸம்ஸேவிதே ।
அம்ப்3வாகாஶதயா விப4க்தபு4வநே அம்போ4ருஹாங்க்4ரித்3வயே
அஹ்நாயாந்தகஸூத3நப்ரியதமே வந்தே3(அ)கி2லாண்டே3ஶ்வரி ॥ 15 ॥

ambhōjāsanamukhyasēvitapadē ambhōdharaśyāmalē
aṅgākalpitaratnabhūṣaṇaśatē aṇḍaughasaṁsēvitē |
ambvākāśatayā vibhaktabhuvanē ambhōruhāṅghridvayē
ahnāyāntakasūdanapriyatamē vandē'khilāṇḍēśvari || 15 ||

1: O Who is worshipped by Lord Brahma seated on the Lotus and all others (ambhōjāsanamukhya-sēvitapadē);
O Who is of dark complexion filled with compassion, like the rain-filled-dark clouds (ambhōdharaśyāmalē);
2: O Whose body is decorated with luminous ornaments with precious gems (aṅgākalpita-ratna-bhūṣaṇaśatē);
O Who is worshipped by all Universes (aṇḍaugha-saṁsēvitē);
3: O Who reigns all worlds that are differentiated by water and space (ambu-ākāśatayā vibhakta-bhuvanē);
O Who has the pair of divine feet that resemble the lotus flowers (ambhōruhāṅghri-dvayē);
4: O Who the Darling of Iśvara, the instant-annihilator of the Lord of Death (ahnāya-antaka-sūdana-priyatamē);
I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 15

அம்மையென மலரயனு மாயனைவர் தொழுவரே, அருட்கருமை மேக வடிவே,
அம்மணியுன் அங்கமொளிர் தங்கமணி ரத்தினம், அகிலவுல காவும் தொழுமே,
அம்மையுன தானபுவ னங்கள்நீர் ஆகாய அளவுனது மலரடியின் இணையே,
அம்மைகணங் காலனரி அரனினருட் காதலி – அன்னை அகிலாண்டேஸ்வரி சரணே!அக்ஷ (15)

1: ஓ மலரயன் முதலானோரால் துதிக்கப்படும் திருவடிகளைக் கொண்டவளே (அம்போ4ஜாஸநமுக்2ய-ஸேவிதபதே3);
மழை மேகம் போன்ற கருமை நிறம் கொண்டவளே(அம்போ4த4ரஶ்யாமலே);
2: ஓ உடலில் ஒளிர்மிகு இரத்தினங்கள் பதித்த நகைகளை அணிந்தவளே (அங்கா3கல்பித-ரத்ந-பூ4ஷணஶதே);
எல்லா உலகங்களாலும் துதிக்கப்படுபவளே (அண்டௌ3க4-ஸம்ஸேவிதே);
3; ஓ நீராலும், வானத்தாலும் வேறுபடுத்தப்பட்ட புவனங்களைக் கொண்டவளே (அம்ப3-ஆகாஶ-தயா விப4க்த-பு4வநே);
ஓ தாமரை மலர்களைப் போன்ற இரு திருவடி இணையினைக் கொண்டவளே (அம்போ4ருஹாங்க்4ரி-த்3வயே);
4: ஓ காலனைக் கணத்தில் அழித்த ஈஶ்வரரின் ஆழ்ந்த அன்புக்குரியவளே (அஹ்நாய-அந்தக-ஸூத3ந-ப்ரியதமே);
தாயே ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி! உன்னை வணங்குகின்றேன். (வந்தே3 அகி2லாண்டே3ஶ்வரி) ॥ 15



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

अस्ताघे अवनम्रदेवनिवहे अस्तोकभाग्योदये
अर्धाधिक्यमनोहरे अचलजे अष्टाक्षरैरर्चिते ।
अर्घातीतमनोज्ञभूषणशते अक्षीणसौभाग्यदे
अर्काम्भोरुहवैरिवह्निनयने वन्देऽखिलाण्डेश्वरि ॥ १६ ॥

அஸ்தாகே$_4$ அவநம்ர தே$_3$வநிவஹே அஸ்தோக பா$_4$க்$_3$யோத$_3$யே
அர்தா$_4$தி$_4$க்ய மநோஹரே அசலஜே அஷ்டாக்ஷரைரர்சிதே ।
அர்கா$_4$ தீதமநோஜ்ஞ பூ$_4$ஷணஶதே அக்ஷீண ஸௌபா$_4$க்$_3$யதே$_3$
அர்காம்போ$_4$ருஹ வைரிவஹ்நிநயநே வந்தே$_3$(அ)கி$_2$லாண்டே$_3$ஶ்வரி ॥ 16 ॥

astāghē avanamra dēvanivahē astōka bhāgyōdayē
ardhādhikya manōharē acalajē aṣṭākṣarairarcitē |
arghātīta manōjñabhūṣaṇaśatē akṣīṇa saubhāgyadē
arkāmbhōruha vairivahninayanē vandē'khilāṇḍēśvari || 16 ||

1: O The Remover of all sins (aastāghē); O Who has the multitude of Devas worshipping (avanamra dēva-nivahē);
O Who considers the well-being of Her devotees and generates auspiciousness (astōka bhāgya-udayē);
2: O The Enchanting, Who balances Iśvara by being His half (ardha-ādhikya manōharē);
O The daughter of Mountains (acalajē); O Who is worshipped by the eight-letters (aṣṭa-akṣarairarcitē)
3: O Who wears luminous ornaments that are immeasurable in value (argha-atīta-manōjñabhūṣaṇaśatē);
O Who grants the ever lasting welfare (akṣīṇa saubhāgyadē)
4: O Who has the Sun, Moon and Agni as Her three eyes (arka-ambhōruha vairivahni-nayanē);
I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 16

அஃதுனது அருளடிகள் அடவியிருள் அழிப்பதே, அஃதமரர் குழுவின் துதியே.
அஃதுனது அரையழகு அரனிடது சமனதே, அட்டெழுத்து அசல நிதியே,
அஃதுனது நகையினொளி அளவரிது அழிவிலா அருள்தருவ துனது கதியே,
அஃதுனது அக்னிமதி சூரியன்மூ விழிகளே - அன்னை அகிலாண் டேஸ்வரி சரணே! (16)

1: ஓ பாவ இருளை அழிப்பவளே (அஸ்தாகே$_4$); ஓ துதிக்கின்ற தேவர்களின் குழுவைக் கொண்டவளே (அவநம்ர-தே$_3$வ-நிவஹே); அடியார்களைச் சிந்தித்து அவர்களுக்கு நலனைத் தோற்றுவிப்பவளே (அஸ்தோக-பா$_4$க்$_3$ய-உத$_3$யே);
2: ஓ அரனின் இடப்பாதியாக இருந்து சமநிலை செய்யும் மனம்கவரும் அழகே (அர்த$_4$-ஆதி$_4$க்ய மநோஹரே);
ஓ மலைமகளே (அசலஜே); ஓ எட்டெழுத்துக்களால் வணங்கப்படுபவளே (அஷ்ட-அக்ஷரைரர்சிதே);
3: ஓ அளக்க முடியாத பெருமதிப்புள்ள நகைகள் அணிபவளே (அர்க$_4$-அதீத-மநோஜ்ஞ-பூ$_4$ஷணஶதே);
ஓ அழியாத நல்ல நிலையை அருள்பவளே (அக்ஷீண ஸௌபா$_4$க்$_3$யதே$_3$);
4: ஓ சூரியன், சந்திரன், அக்னி ஆகியவற்றை முக்கண்களாகக் கொண்டவளே (அர்க-அம்போ$_4$ருஹ-வைரிவஹ்நி-நயநே);
தாயே ஸ்ரீ அகிலாண்டாடேஶ்வரி! உன்னை வணங்குகின்றேன். (வந்தே$_3$ அகி$_2$லாண்டே$_3$ஶ்வரி) ॥ 16

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

कावेरी पुलिनालये कमलजे कामारिवामालये
कारुण्यामृत लोचने कविनुते कन्दर्पकान्तिप्रदे ।
कल्याणि क्षितिलोक कल्पलतिके कारुण्यवारान्निधे
कालाम्भोधरकम्रकुण्डलधरे वन्देऽखिलाण्डेश्वरि ॥ १७ ॥

காவேரீ புலிநாலயே கமலஜே காமாரிவாமாலயே
காருண்யாம்ருத லோசநே கவிநுதே கந்த$_3$ர்பகாந்திப்ரதே$_3$ ।
கல்யாணி க்ஷிதிலோக கல்பலதிகே காருண்யவாராந்நிதே$_4$
காலாம்போ$_4$த$_4$ர கம்ர-குண்ட$_3$லத$_4$ரே வந்தே$_3$(அ)கி$_2$லாண்டே$_3$ஶ்வரி ॥ 17 ॥

kāvērī pulinālayē kamalajē kāmārivāmālayē
kāruṇyāmṛta lōcanē kavinutē kandarpakāntipradē |
kalyāṇi kṣitilōka kalpalatikē kāruṇyavārānnidhē
kālāmbhōdharakamra kuṇḍaladharē vandē'khilāṇḍēśvari || 17 ||

1: O Who reigns on the banks of River Cauvery (kāvērī pulinālayē); O Who blossoms in the lotus-heart (kamalajē); O Who resides on the left-side of Lord *Śiva*, the destroyer of desires and delusions (kāma-ari-vāma-ālayē);

2: O With the eyes that showers the elixir of grace (kāruṇya-amṛta lōcanē); O Who is adored by the Poets (kavinutē); O Who grants the lustre to Manmatha, the Lord of desires (kandarpa-kānti-pradē);

3: O Kalyāṇi (kalyāṇi); O Who is like the wish-bearing Kalpaka Tree in this earth (kṣiti-lōka-kalpa-latikē); O The Ocean of Compassion (kāruṇyavārānnidhē);

4: O Who wears the dark-clouds that rains the bliss of elixir on Her ears (kālāmbhōdhara-kamra-kuṇḍaladharē); I pray to you,O Mother Śri Akhilāṇḍēśvari (vandē-akhilāṇḍēśvari) || 17

காவிரியின் கரையுனது தலமே, இதயக் கமலமிடம் காமனரி இடமே
கருணைமழை பொழியுவிழி புலவோர் புகழும் காமனொளிக் காந்தியரு ளிடுமே
கவினுலகில் கல்யாணி உனையே அருளும் கற்பகமாய்க் காணுமருட் கடலே,
கமழுகுழை கருணை மழை முகிலே - அன்னை அகிலாண் டேஸ்வரி சரணே! (17)

1: ஓ காவிரி நதிக்கரையில் இருப்பவளே (காவேரீ புலிநாலயே); ஓ -இதயத்- தாமரையில் தோன்றுபவளே (கமலஜே); காமனை அழித்த சிவபெருமானின் இடப்பாகத்தில் குடியிருப்பவளே (காம-அரி-வாம-ஆலயே);

2: ஓ அருள் அமுதம் பொழியும் விழிகளை உடையவளே (காருண்ய-அம்ருத-லோசநே); ஓ கவிஞர்களால் போற்றப்படுபவளே (கவிநுதே); ஓ மன்மதனுக்கு ஒளியைக் கொடுத்தவளே (கந்த$_3$ர்ப-காந்தி-ப்ரதே$_3$);

3: ஓ கல்யாணி (கல்யாணி); ஓ பூமியில் கற்பகத்தருவாக அருள்பவளே (க்ஷிதிலோக கல்பலதிகே); கருணைக் கடலே (காருண்ய-வாராந்நிதே$_4$);

4: ஓ அருள்மழை தரும் கருமேகங்களை அழகிய குழைகளாக அணிந்தவளே (கால-அம்போ$_4$த$_4$ர-கம்ர-குண்ட$_3$லத$_4$ரே); தாயே ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி! உன்னை வணங்குகின்றேன். (வந்தே$_3$ அகி$_2$லாண்டே$_3$ஶ்வரி) ॥ 17

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி (திருவானைக்காவல்)

खर्वाटे खगकेतनानुजवरे खट्वाङ्गपाणिस्तुते
खर्वाखर्वविवर्जिते खगमयूखाराधिते खड्गिनि ।
खद्योतेशवरप्रदे खगनुते खद्योतकोटिप्रभे
खण्डेन्दूज्ज्वलशेखरे खगचरे वन्देऽखिलाण्डेश्वरि ॥ १८ ॥

க2ர்வாடே க2க3கேதநாநுஜவரே க2ட்வாங்க3பாணிஸ்துதே
க2ர்வாக2ர்வவிவர்ஜிதே க2க3மயூகா2ராதி4தே க2ட்3கி3நி ।
க2த்3யோதேஶவரப்ரதே3 க2க3நுதே க2த்3யோதகோடிப்ரபே4
க2ண்டே3ந்தூ3ஜ்ஜ்வலஶேக2ரே க2க3சரே வந்தே3(அ)கி2லாண்டே3ஶ்வரி ॥ 18

kharvāṭē khagakētanānujavarē khaṭvāṅgapāṇistutē
kharvākharvavivarjitē khagamayūkhārādhitē khaḍgini |
